## கூட்டுறவு மிகை நிதியம் - 2017

கூட்டுறவு மிகை நிதியத்தின் 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான செலவினக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டன. நிதியத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்து பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன்.

### 1.4 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் விளைவாக விரிவான வருமானக்கூற்று, நிதிச்செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றில் அறிக்கையிடப்பட்ட அல்லது அறிக்கையிடப்படாத அல்லது விடயங்கள் மற்றும் மூலாதாரங்கள் தொடர்பாகவும் ஏதும் செம்மையாக்கல்கள் அவசியமானவையாக காணப்படுமா என்பதனை நான் நிச்சயிக்க முடியாதுள்ளேன்.

## 2 நிதிக்கூற்றுக்கள்

### 2.1 மறுப்பு அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன். அதற்கிணங்க இந்நிதிக்கூற்றுக்கள் மீது நான் அபிப்பிராயம் ஒன்றினைத் தெரிவிக்கவில்லை.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 1

(i) நியமத்தின் 59 ஆம் பந்தியின் பிரகாரம் விசேட வெளிப்படுத்தல்கள் நிதிச்செயலாற்றல் கூற்றில் வெளிப்படுத்தப்பட வேண்டிய போதிலும் ரூபா 12,652,039 தொகையான அறவிட முடியாக்கடன், வருமானச் செலவினக் கணக்கில் காண்பிக்காமல் ஏனைய செலவினத்தின் கீழ் உள்ளடக்கப்பட்டிருந்தது.

(ii) நியமத்தின் 132 ஆம் பந்தியின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது பயன்படுத்தப்பட வேண்டிய ஆதனங்கள், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் என்பவற்றிள் முகப்பு பெறுமதி, பெறுமானத்தேய்வு விகிதம், முதலீடு மற்றும் முதலீட்டு வட்டி போன்றவை தொடர்பாக அளவீட்டு அடிப்படை வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 2

(i) மீளாய்வாண்டின் காசுப் பாய்ச்சலுக்கு தாக்கமளிக்காத முன்னைய ஆண்டிற்குரிய திரண்ட மிகைக்கு செய்யப்பட்ட ரூபா 338,399 ஆன சீராக்கம் காசுப் பாய்ச்சல் கூற்றில் நிதிச் செயற்பாடுகளின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ii) நியமத்தின் 40 பந்தியின் பிரகாரம் ரூபா 127,467,899 ஆன முதலீட்டு வட்டி பெறுவனவு முதலீட்டு காசுப்பாய்ச்சலாக காசுப் பாய்ச்சல் கூற்றில் வேறாக வெளிக்காட்டாமல் தொழிற்பாட்டு செயற்பாடுகளில் வருமான மிகையொன்றாக காட்டப்பட்டிருந்தது.

(iii) மீளாய்வாண்டில் நிலையான வைப்புக்கள் முதலீட்டில் தேறிய காசுப் பாய்ச்சல் ரூபா 79,100,000 ஆக இருந்த போதிலும், காசுப்பாய்ச்சல் கூற்றில் அது 109,401,036 எனக் குறிப்பிடப்பட்டிருந்தது.

(iv) காசு உட்பாய்ச்சல் அல்லாத ரூபா 30,432,140 தொகையான மூலதனமாக்கப்பட்ட முதலீட்டு வட்டி காசுப்பாய்ச்சல் கூற்றில் தொழிற்பாட்டு செயற்பாடுகளின் காசு உட்பாய்ச்சலாக காண்பிக்கப்பட்டிருந்தது.

**(இ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் - 07**

நியமத்தின் 65 ஆம் பந்தியின் பிரகாரம் நடைமுறையல்லாத சொத்துக்களுக்காக பயனுள்ள ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாத காரணத்தினால் ரூபா 2,720,810 கிரயத்திலான நடைமுறையல்லாத சொத்துக்கள் முழுமையாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்த போதிலும் நிதியத்தினால் தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டு வந்தன. அதன் பிரகாரம் மதிப்பிடப்பட்ட வழு இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம 03 இன் பிரகாரம் திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்குரிய கூட்டுறவுச் சங்க கடன் வட்டி வருமானம் ரூபா 35,469,591 ஆக இருந்த போதிலும் வருமானக் கூற்றில் அது 98,776,480 என குறிப்பிடப்பட்ட காரணத்தினால் ஆண்டின் வருமானம் மற்றும் பெற வேண்டிய கூட்டுறவுச் சங்க கடன் வட்டி வருமானம் ரூபா 63,306,889 ஆல் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் ஆரம்ப திகதியில் காணப்பட்ட கூட்டுறவுச் சங்க கடன் மீதியான ரூபா 506,924,925 தொகையில் ஆண்டில் கடன் அறவீடு ரூபா 1,690,735 தொகை கடன் கணக்கிற்கு செலவு வைக்கப்படாமல் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஐந்தொயில் நடைமுறைப் பொறுப்பின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) நிதியத்தின் ஐயக் கடன் ஒதுக்கீட்டுக் கொள்கையின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கூட்டுறவுச் சங்க சுழற்சிக் கடன் மீதி அடிப்படையில் ஒதுக்கப்பட வேண்டிய நிதிஏற்பாடு ரூபா 12,526,022 ஆக இருந்த போதிலும், அத்திகதியில் மேற்கொள்ளப்பட்டிருந்த நிதிஏற்பாடு ரூபா 81,686,262 ஆக இருந்தமையால் கணக்குகளில் கூடுதலாக மேற்கொள்ளப்பட்டிருந்த நிதிஏற்பாடு ரூபா 69,160,240 ஆக இருந்தது.

### 2.2.3 விளக்கமளிக்கப்படாத வித்தியாசங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியில் நானாவித கடன்பட்டோர் மீதியின் கீழ் குறிப்பிடப்பட்டிருந்த கூட்டுறவுச் சங்க கடன் மீதிகளில் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மற்றும் உப அட்டவணையின் பிரகாரம் மீதிகளுக்கு இடையே ரூபா 76,776,988 ஆன வேறுபாடு காணப்பட்டது.

(ஆ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஐந்தொகையில் ஆதனங்கள் இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களுக்குரிய பெறுமதி மற்றும் பட்டோலையின் பிரகாரம் பெறுமதிக்கிடையே ரூபா 184,903 ஆன வேறுபாடு காணப்பட்டது.

### 2.2.4 தொங்கல் கணக்கு

நீண்டகாலமாக முன்கொண்டு வரப்படும் தொங்கல் கணக்கில் ரூபா 9,475,735 ஆன மீதியொன்று நடைமுறைப் பொறுப்புக்களில் உள்ளடக்கப்பட்டிருந்தன.

### 2.2.5 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

பின்வரும் ஒவ்வொரு கணக்கு விடயங்களுக்கு எதிரே காட்டப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்கு சமர்பிக்கப்படாததன் காரணமாக கணக்காய்வின் போது அவற்றை திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்தப்பட முடியாதிருந்தன.

| | கணக்கு விடயம் | பெறுமதி | சமர்பிக்கப்படாத சான்று |
|---|---|---|---|
| | | ரூபா | |
| i. | பெற வேண்டிய கூட்டுறவு சங்கக் கடன் | 669,008,476 | மீதி உறுதிப்படுத்தல்கள் |
| ii. | கூட்டுறவு நிதியத்திலிருந்து பெறவேண்டிய தொகை | 5,029,486 | மீதி உறுதிப்படுத்தல்கள் |
| iii. | பொது வைப்புக் கணக்கு | 5,500,289 | விரிவான அட்டவணை |
| iv. | நிலையான வைப்பு பிணை கடன்கொடுத்தோர். | 58,918,112 | கடன் கோவைகள் மற்றும் மீதி உறுதிப்படுத்தல்கள் |
| v. | ஒழித்தல் கணக்கு (வரவு மீதி) | 2,620,473 | தயாரிக்கப்பட்ட தலைப்பு கணக்கின் பிரதியொன்று |
| vi. | செலுத்த வேண்டிய திறைசேரி நிதியம் | 150,000 | மீதியை உறுதிப்படுத்தல்கள் மற்றும் விரிவான அட்டவணைகள் |
| vii. | செலுத்த வேண்டிய தேசிய நம்பிக்கை பொறுப்பு நிதியம் | 3,871,256 | மீதியை உறுதிப்படுத்தல்கள் மற்றும் விரிவான அட்டவணைகள் |
| viii. | செயற்பாட்டுக் கணக்கு சீராக்கம் | 338,400 | நாட்குறிப்பு பதிவுகள் |

## 2.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மிகை நிதியத்திற்குச் செலுத்த வேண்டிய ரூபா 6,017,550 தொகை 5 ஆண்டுகளாகவும் ஏனைய செலுத்த வேண்டிய 05 பொறுப்புக் கணக்குகளின் மீதிகள் ரூபா 1,020,235 கூட்டுத்தொகை 6 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் தீர்க்கப்படாமல் காணப்பட்டன.

(ஆ) வ/ப இலங்கை நுகர்வோர் கூட்டுறவு சங்கத்திற்கு 1992 ஆண்டு முதல் 2014 ஆண்டு வரை வழங்கியிருந்த ரூபா 157,221,330 இற்கான கடன் தொகையில் ரூபா 130,398,674 இற்கான கடன் மீதி மற்றும் அதனுடன் தொடர்புடைய ரூபா 54,839,436 நிலுவை வட்டி தொடர்ந்தும் அறவிடப்பட வேண்டியிருந்தது. இவற்றில் 5 சந்தர்ப்பங்களில் வழங்கியிருந்த ரூபா 107,721,330 இற்கான கடன் தொகையில் கடன் தவணைப் பணமோ அல்லது வட்டியோ அறவிடப்பட்டிருக்கவில்லை.

(இ) வரையறுக்கப்பட்ட குருணாகல் வைத்தியசாலை சங்கத்திற்கு புதிய கட்டிடத் தொகுதியொன்றை நிர்மாணிப்பதற்காக 2012 செப்தம்பர் 26 ஆந்'திகதி ரூபா 100,000,000 ஆன கடன்தொகையொன்று வழங்கப்பட்டிருந்தது. கடன் உடன்படிக்கையின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரை ரூபா 18,750,015 தொகை அறவிடப்பட வேண்டியிருந்த போதிலும் அத்திகதி வரையில் எவ்வித கடன் தவணைப் பண மொன்றோ அறவிடப்படாதிருந்ததுடன் அத்திகதியில் நிலுவையாக இருந்த வட்டி ரூபா 3,060,164 ஆக இருந்தது.

(ஈ) 1992 ஆண்டு முதல் 2014 ஆண்டு வரையில் காலப்பகுதியில் 9 கூட்டுறவு சங்கங்களுக்கு வழங்கியிருந்த கூட்டுத்தொகை ரூபா 184,119,496 தொகையான கடன் தொகையில் 2017 திசெம்பர் 31 வரை எதுவித பணமும் அறவிடப்பட்டிருக்காததுடன் அது தொடர்பாக அறவிடப்பட வேண்டிய வட்டி ரூபா 45,565,282 ஆக இருந்தது.

(ஈ) கூட்டுறவு மொத்த விற்பனவு நிலையத்திற்கு சொந்தமான காணியில் சிறப்பு பால் விற்பனன நிலையம் ஒன்றை நிர்மாணிப்பதற்கு வ/ப இலங்கை பால் உற்பத்தியாளர்களின் கூட்டுறவு சங்கத்தில் 2007 ஆண்டின் போது வழங்கியிருந்த ரூபா 18,249,750 இற்கான கடன் தொகையில் ரூபா 16,549,750 தொகை மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிக் காணப்பட்ட போதிலும் அச் சங்கம் தற்போது செயற்படாத நிலைமையில் காணப்பட்டதால் கடனை அறவீடு செய்தல் நிச்சயமற்ற நிலைமையில் காணப்பட்டது.

(உ) வ/ப நிக்கவெரட்டிய அபிவிருத்தி கூட்டுறவு சங்கத்திற்கு நிர்மாணவேலை ஒப்பந்த வேலை ஒன்றினை நிறைவேற்றுவதற்காக 2014 ஜனவரி 17 திகதி ரூபா 4,000,000 இற்கான வட்டி இல்லாத கடன் ஒன்று வழங்கப்பட்டிருந்தது. நிர்மாண ஒப்பந்த வேலை 03 மாதங்களில் பூர்த்தி செய்து கிடைக்கும் வருமானத்தில் இருந்து அல்லது கூட்டுறவு சங்கத்திற்கு சேகரிக்கப்படும் பணம் ஆகிய இரண்டில் ஆரம்பத்தில் கிடைக்கும் பணத்தினால் ஒரே தடவையில் கடன் தொகையை திருப்பிச் செலுத்துவதாக உடன்படிக்கையின் பிரகாரம் இணக்கத்தை தெரிவித்திருந்த போதிலும் 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 1,000,000 இற்கான கடன் மீதியொன்று மேலும் அறவிடப்பட வேண்டியிருந்தது.

(ஊ) கொபெய்கனே கூட்டுறவு சங்கத்திற்கு சொந்தமான எரிபொருள் நிரப்பு நிலையமொன்றின் நவீனமயப்படுத்துவற்காக 2013 ஏப்ரல் 05 திகதி வழங்கியிருந்த ரூபா 10,000,000 இற்கான கடன் தொகையில் 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 9,166,666 அறவிடப்பட வேண்டியிருந்த போதிலும் அதிலிருந்து எவ்வித பணமும் அறவிடப்பட்டிருக்கவில்லை. 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அதற்காக அறவிடப்பட வேண்டிய வட்டி ரூபா 3,564?453 ஆக இருந்தது. 2014 ஒக்தோபர் 10 ஆந் திகதி மீண்டும் அதே விடயத்திற்காக ரூபா 7,000,000 கடன் வழங்கப்பட்டிருந்ததுடன், இக்கடன் மாதாந்தம் ரூபா 150,000 என மாதாந்த தவணையில் அறவீடு செய்யப்பட வேண்டிய போதிலும் 2017 திசெம்பர் 31 திகதி வரை ரூபா 5,527,320 தொகையான கடன் மீதியொன்றும் ரூபா 972,855 ஆன வட்டியொன்று அறவிட வேண்டியிருந்தது.

(எ) கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தினால் தற்போது செயற்படாத சங்கங்கள் என இனங்காணப்பட்டிருந்த 11 கூட்டுறவு சங்கங்களுக்கு 1990 ஆண்டு முதல் 2000 ஆண்டு வரையான காலப்பகுதியில் வழங்கியிருந்த கடன் தொகைகளில் 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 21,404,358 கூட்டுத்தொகையான கடன் மீதியொன்றும் ரூபா 8,261,390 கூட்டுத்தொகையான வட்டித்தொகையும் அறவிடப்பட வேண்டியிருந்தது.

(ஏ) வ/ப நொச்சியாகம, வ/ப ஹொரவாபத்தான பலநோக்கு கூட்டுறவு சங்கம் கலைக்கப்பட்டிருந்ததாக வெளிப்படுத்தியிருந்ததனால் இந்த இரண்டு சங்கங்களுக்கும் வழங்கியிருந்த கடன் தொகைகளில் 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய முறையே ரூபா 241,666 மற்றும் ரூபா 1,000,000 தொகையான கடன் மீதிகளை அறவீடு செய்தல் நிச்சயமற்ற நிலைமையில் காணப்பட்டது.

(ஐ) மீளாய்வாண்டளவில் செயற்படாது காணப்பட்ட வ/ப பால் உற்பத்தியாளர்களின் கூட்டுறவு சங்கத்திற்கு வழங்கியிருந்த ரூபா 14,849,750 ஆன கடன் தொகை 2008 ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரை மாற்றமுராது முன் கொண்டுவரப்பட்டிருந்தது. காணப்பட்டது. கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரினால் 2015 ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் வரைவு கணக்காய்வு அறிக்கைக்கு வழங்கியிருந்த பதிலில் ‘‘பாடசாலைகளுக்காக இலவசமாக பால் நிலையங்கள் வழங்கும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வழங்கியிருந்த இந்தப் பணத்தை திருப்பி அறவீடு செய்ய முடியாது எனவும் உதவித்தொகை என்பதனால் உடன்படிக்கை ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை என’’ குறிப்பிட்டிருந்த போதிலும் 2017 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் நானாவித கடன்பட்டோரின் கீழ் இக்கடன்தொகை காண்பிக்கப்பட்டிருந்தது

(ஒ) 1999 ஆண்டு முதல் முன்கொண்டு வரப்பட்டு காணப்படும் ரூபா 1,716,566 இற்கான மறுக்கப்பட்ட காசோலை மீதியொன்று நாணாவித சொத்துக்களின் கீழ் காணப்பட்டது.

(ஔ) நாணவித கடன்பட்டோரின் கீழ் காண்பிக்கப்பட்ட திறைசேரி பிரதி செயலாளரிடமிருந்து கிடைக்க வேண்டிய கடன்வட்டியாக 2000 ஆம் ஆண்டில் இருந்து முன் கொண்டு வரப்படும் ரூபா 81,271,370 தொகையை தீர்வு செய்வதற்க நடவடிக்கை எடுக்கவில்லை.

## 2.4 சட்டங்கள் விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்

பின்வரும் இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள் விதிகள், பிரமாணங் களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை<br>நிதிப்பிரமாணம் 188(2) | 2003 மற்றும் 2014 ஆண்டுகள் தொடர்பாக கூட்டுத்தொகைக்கான ரூபா 106,093 வைப்பு செய்யப்பட்ட ஆனால் தேறப்படாத 02 காசோலைகள் தொடர்பாக நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (ஆ) | 2006 திசெம்பர் 22 ஆந் திகதிய பீஎப்/423 ஆம் இலக்க பொதுநிதி சுற்றறிக்கையின் பிரிவு 4.3 | கணக்கு ஆண்டு முடிவடைந்த 02 மாதங்களுக்கு மீளாய்வாண்டிற்கான செயலாற்றுகை அறிக்கையுடன் திரண்ட நிதியத்தின் மாற்றங்களைக் காட்டும் கூற்றொன்று பொது நிதிப் பணிப்பாளர் நாயகத்திற்கு பிரதி ஒன்றுடன் காணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்பித்திருக்கவில்லை. |

## 3 நிதிச் செயலாற்றுகை

### 3.1 நிதி விளைவுகள்

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான நிதியத்தின் நிதி விளைவுகள் ரூபா 206,780,520 ஆன மிகையொன்று காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மிகை ரூபா 103,997,327 தொகையாக இருந்தமையால் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகளில் ரூபா 102,783,193 ஆன வளர்ச்சி ஒன்றினை காட்டியது. திணைக்களத்தின் நவீனமயப்படுத்தல் செலவினம் ரூபா 5,949,591 ஆல் அதிகரித்த போதிலும், வட்டி வருமானம் ரூபா 107,292,349 இனால் அதிகரித்திருந்தல் மேற்கூறிய அதிகரிப்புக்கு முக்கியமாக தாக்கமளிருந்தது.

மீளாய்வாண்டினதும் கடந்த 4 வருடங்களினதும் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது 2013 ஆண்டு முதல் 2017 ஆண்டு வரை நிதி மிகை இடையறாது வளர்ச்சியடைந்திருந்தது. நடைமுறையல்லாத சொத்துக்களுக்காக பெறுமானத்தேய்வினை கவனத்தில் எடுத்த போது 2013 ஆண்டின் போது ரூபா 28,641,018 தொகையான பங்களிப்பு 2017 ஆண்டளவில் ரூபா 179,709,665 வரை வளர்ச்சியடைந்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றுகை

மீளாய்வாண்டில் நிதியத்தின் வருமானம் 226,244,380 ஆக இருந்ததுடன், அதில் நிதியத்தின் நோக்கங்களிலிருநது விலகி ரூபா 5,990,957 தொகை திணைக்களத்தின் நவீனமயப்படுத்தும் செலவினத்திற்காக செலவிடப்பட்டிருந்ததுடன், 1974 சனவரி 10 வர்த்தமானி அறிவித்தலின் மூலம் வெளியிடப்பட்ட கூட்டுறவு சட்ட விதிகளில் 44(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களுக்காக ரூபா 492,119 தொகை மாத்திரம் செலவிடப்பட்டிருந்தது. அவ்வாறே மிகை நிதியத்தின் நோக்கத்திற்குட்பட்ட செயற்பாடுகளிலிருந்து விலகி நிலையான வைப்புக்கள் மற்றும் திறைசேரி உண்டில்களில் முதலீடு செய்யப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியில் காணப்பட்ட முதலீடுகளின் பெறுமதி ரூபா 1,235,903,403 ஆக இருந்தது.

### 4.2 முகாமைத்துவச் செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கூட்டுறவு சங்கங்களுக்கு ரூபா 773,117,004 தொகையொன்று கடனாக வழங்கியிருந்த போதிலும் இது தொடர்பாக திணைக்களத்தினால் பின்தொடர் நடவடிக்கை எடுத்தல் பலவீன மட்டத்தில் காணப்பட்டமையால் 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 506,924,925 தொகை அதாவது வழங்கியிருந்த கடன் தொகையில் 66 சதவீதத் தொகையொன்று மற்றும் கூட்டுத்தொகை ரூபா 162,083,550 ஆன வட்டி தொகையொன்று அறவிடப்பட வேண்டியிருந்தது.

(ஆ) மனிதவள கூட்டுறவு சங்கத்தின் ஒழித்தல் விடயங்களுக்காக 2007 ஆண்டு முதல் 2015 ஆண்டு வரை இடையிடையே நிருவாக செலவுகள் பிணக்கு தீர்ப்பதற்கான கட்டணம், சட்டச் செலவுகள், பிரயாணச் செலவு, விருந்தோம்பல், கூட்டங்கள், கணக்காய்வு விடயங்களுக்காக 2010 ஆம் ஆண்டின் போது வைப்புக்களை விடுவிப்பதற்காக நிதியத்தினால் செலவிடப்பட்ட ரூபா 56,901,825 தொகை ஐந்தொகையில் நடைமுறைச் சொத்துக்களின் கீழ் பெறவேண்டியதாக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் கூட்டுறவு சங்கத்தின் இறுதி கணக்கறிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு சரியான மீதி இணங்கண்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே கலைப்பு நடவடிக்கைகளுக்காக 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளின் போது முறையே ரூா 1,244,081 மற்றும் ரூபா 472,119 தொகைகள் செலவிடப்பட்டிருந்தன. சங்கத்தின் பதிவு 2009 ஆம் ஆண்டின் போது இரத்துச் செய்யப்பட்டிருந்த போதிலும் அதன் கலைப்பு நடவடிக்கைகள் கணக்காய்வுச் சந்தர்ப்பமான 2018 ஆகஸ்ட் வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டின் போது வங்கி நடைமுறைக் கணக்கில் ஆகஸ்ட் மாதம் தவிர ஏனைய ஒவ்வெரு மாத இறுதியிலும் ரூபா 4 மில்லியனை விட மிகையான மீதியொன்று பேணி வரப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டின் இறுதியில் காணப்பட்ட கூட்டுறவு சங்க கடன் மீதியான ரூபா 506,924,925 தொகை நீண்டகாலமாக அறவிடப்படாத கடன் மீதிகள் வேறாக இனங்காணாமல் மொத்தக் கடனுக்காக 2.5 வீதம் ஐயக்கடனுக்கான ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அவ்வாறே ரூபா 165,373,998 ஆன ஏனைய கடன் தொடர்பாக ஐயக்கடன் ஏற்பாட்டுக் கொள்கையொன்று அறிமுகப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**4.3 சர்ச்சைக்குரிய தன்மையுள்ள கொடுக்கல் வாங்கல்கள்**

1972 இன் 5 ஆம் இலக்க கூட்டுறவு சட்டம் தொடர்பாக வெளியிட்டுள்ள கூட்டுறவு சங்க விதி 44(iii) இன் பிரகாரம் கூட்டுறவு மிகை நிதியிலிருந்து கூட்டுறவு சங்கங்களுக்கு மாத்திரம் கடன் வழங்க முடியுமெனினும் அதற்கு முரணாக 2013 ஆண்டின் போது கட்டிடப் பொருள் கூட்டுத்தாபனத்திற்கு இருதரப்பினரால் மேற்கொள்ளப்பட்டிருந்த உடன்படிக்கையின் பேரில் 2013 ஆம் ஆண்டின் போது ரூபா 75,000,000 இற்கான கடன்தொகையொன்று வழங்கியிருந்தது. அக்கடன்தொகையில் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 62,091,327 ஆன கடன்தொகை ஒன்று மற்றும் ரூபா 25,827,742 ஆன வட்டித் தொகையும் அறவிடப்பட வேண்டியிருந்தது. கடன் உடன்படிக்கையின் பிரகாரம் கடனைச் செலுத்துவதற்கு தவறினால் அதற்காக பிணை பொறுப்பாக இரண்டு சொத்துக்கள் அடகுவைத்தல் அறவிடுவதற்கு இருதப்பினராலும் இணங்கப்பட்டிருந்தது. தற்போது கடன் அறவீட்டுக் காலம் கடந்திருந்த போதிலும் சொத்துக்கள் அடமானத்திலிருந்து கடனை அறவிடுவதற்கு நிதியத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு குறைபாடுகள் அவ்வப்போது ஆணையாளர் மற்றும் சங்கங்களின் பதிவாளரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் | அவதானிப்புக்கள் |
|---|---|
| (அ) கணக்கீடு | நாட்குறிப்புக்கள் தயாரித்திருக்காமை மற்றும் அங்கீகரித்திருக்காமை. |
| (ஆ) நிலையான சொத்துக்கள் | நிலையான சொத்துக்கள் பதிவேடு உரிய முறையில் பேணப்படாமை. |
| (இ) கடன் கட்டுப்பாடு | (i) கூட்டுறவு சங்சங்களின் நிதி சாத்தியக்கூறினை பரிசோதனை செய்யாமை. |
| | (ii) கடன் வழங்கும் போது உடன்படிக்கைகள் மேற்கொள்ளப்படாமை கடன் அறவீட்டின் பலவீனங்கள் காணப்படல். |
| | (iii) வழங்கியிருந்த கடன்கள் தொடர்பாக பின்தொடர் நடவடிக்கை உரிய முறையில் மேற்கொள்ளப்படாமை. |